(இ) 1971-72-ஆம் நிதி ஆண்டில் புதிதாக எத்தனை நிலையங்கள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன?

(உ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் ஆகிய நகரங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்க செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) 58.

(இ) 3.

(உ) இல்லை.

திரு. எம். ராஜா அய்யர்: துணைத் தலைவர் அவர்களே, ராமநாத புரம் மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களில் இந்த மாதிரி ஃபையர் ஸ்டேஷன்கள் இருக்கின்றன என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். வேறு ஏதாவது ஊர்களில் இப்படி ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ராமநாதபுரம் மாவட்டத் தில் காரைக்குடி, ராஜபாளையம், சிவகாசி, விருதுநகர் ஆகிய நகரங்களில் ஏற்கனவே தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. அருப்புக்கோட்டை தீயணைப்பு நிலையம் முன்னுரிமைப் பட்டியலில் இரண்டாவது இடம் வகிக்கிறது. இதைத் தவிர தேவகோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்கள் பட்டியலில் இடம்பெற்றிருக் கின்றன.

திரு. எம். ராஜா அய்யர்: கிழக்கு ராமநாதபுரத்தில் அந்த நகரங்கள் இல்லாததால், கிழக்கு ராமநாதபுரத்தில் தீ விபத்து ஏதும் ஏற்படும்போது காரைக்குடி, விருதுநகரிலிருந்து வரவேண்டி யிருக்கிறது. சிவகங்கைக்கு முக்கிய இடம் கொடுத்தால், கிழக்கு ராமநாதபுரத்திற்குத் தீயணைக்கும் மோட்டார் வருவதற்கு சௌ கரியமாக இருக்குமென்பதை அரசாங்கம் கவனிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசாங்கம் இதை ஒரு குறிப்பாக கொண்டு நிதிநிலைக்கு ஏற்றவாறு உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்க முயற்சிசெய்யும்.

Seminar on Educational Planning

* 27 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any seminar was conducted at Coimbatore by the State Government on Educational Planning during May 1971;

(b) if so, the parties that collaborated in this venture; and

(c) the details of the work done by this Seminar?

[25th October 1971

கல்வித் திட்ட கருத்தரங்கு.

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கல்வித் திட்டம் குறித்து 1971 மே திங்களில் மாநில அரசு கருத்தரங்கு ஏதேனும் நடத்தியதா?

(இ) ஆமெனில், இந்த முயற்சியில் ஒத்துழைத்த கட்சிகள் யாவை?

(உ) இந்தக் கருத்தரங்கு செய்த பணியின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இக்கருத்தரங்கு பள்ளிக் கல்வித் துறையினரால் புதுடெல்லி ஆசியக் கல்வித் திட்ட ஆராய்ச்சி நிலையத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

(உ) கல்வி வளர்ச்சி குறித்த பல பொருள்களும் இக்கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டன.

திரு. எம். ராஜா அய்யர்: துணைத் தலைவர் அவர்களே, இக்கருத்தரங்கின் முக்கியமான முடிவுகள் பள்ளிகளுக்கும் இதர கல்வி நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்தரங்கு மே மாதம் 25-ந் தேதி முதல் 29-ந் தேதி வரையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டவர்கள் ஐந்து குழுக்களாகப் பிரிந்து மாநில நான்காவது கல்வி ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் கல்வித்துறை நிர்வாகம், அமைப்பு முறை, பிற பிரச்னைகளைப்பற்றியும் மாவட்ட நிலையில் கல்வித் திட்டம், வளர்ச்சி பற்றியும், அதிக அளவில் நிதி முதலீடு இல்லாமல் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டம் பற்றியும் கல்வி வளர்ச்சி சம்பந்தமான பணிகளையும் சீரமைப்பு பற்றியும், இப்படி ஐந்து தலைப்புகளின் கீழ் தனித்தனியாக ஆராய்ந்து சிலபல முடிவுகளைத் தந்திருக்கிறார்கள். அந்த முடிவுகளை கல்வித் துறையினர் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். ஆறுமுகசாமி: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியில் நான் கேட்டிருப்பது இந்தக் கருத்தரங்கில் ஒத்துழைத்த கட்சிகள் யாவை என்பது. அதைப்பற்றிக் கல்வி அமைச்சர் விவரம் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, கட்சி அடிப்படையில் கூட்டப்படவில்லை. அந்தக் கருத்தரங்கைக் கல்வித் துறையினரும் மாவட்டக் கல்வி அதிகாரிகளும் மற்றவர்களும் கூட்டியிருந்தார்கள். அவர்களிடத்தில் இந்தப் பிரச்னைகள் தரப்பட்டு ஆராய்ந்தார்கள். பெரும்பாலும் மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரிகள் கல்வி துறையில் ஈடுபட்டவர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர், அரசுக் கல்வித் துணைச் செயலாளர், மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் இவர்களால்

25th October 1971]

துவக்கப்பட்டு சேர்ந்து நடத்தப்பட்டது, இதில் கட்சிச் சார்பிற்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகசாமி: அரசியல் கட்சி என்று நான் சொல்லவில்லை. பார்ட்டி என்பதற்கு சரியான தமிழ் சொல் தெரியாத காரணத்தால் கட்சி என்றேன். அதில் கலந்து கொண்ட அறிவாளிகள் யார் யார், என்னென்ன தகுதியின் அடிப்படையில் கலந்துகொண்டார்கள் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்த மகாநாட்டில் டாக்டர் மு. வரதராசன் துவக்க உரை ஆற்றினர். கல்வித் துறை இயக்குனர் வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினர். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு தலைமை தாங்கினர், கல்வி அமைச்சர் கலந்துகொண்டார்.

திரு. எஸ். முத்துசாமி: இந்தக் கருத்தரங்கு கல்வி சம்பந்தப் பட்டிருப்பதால் ஆசிரியர் தொகுதிப் பிரதிநிதிகள் அழைக்கப் பட்டார்களா? அப்படி அழைக்கப்படாவிட்டால், இனிமேலாவது அழைக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இது புது டில்லியிலுள்ள தேசியக்கல்வி ஆராய்ச்சிக் குழுவின் ஒத்துழைப்போடு இங்குள்ள கல்வித் துறையினரால் அமைக்கப்பட்டது. யார் யார் அழைக்கப்பட்டார் கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்லலாம்.

திரு. எஸ். முத்துசாமி: இப்படிப்பட்ட கருத்தரங்கிற்கு அழைப்பு வந்தாலும், அது கருத்தரங்கு முடிந்த பிறகு, உறுப் பினர்களுக்குக் கிடைக்கிறது. அதை முன்னலேயே அனுப்பு வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அழைப்புகள் அனுப்புவதில் காலத் தாழ்வு ஏற்பட்டிருக்குமானல், அது கவனிக் கப்பட வேண்டிய ஒன்ருகும். கருத்தரங்கிற்கு அழைப்பு என்றல், நடைபெறுவதற்கு முன் அனுப்புவதுதான் முறை. நடந்தபிறகு வந்தால் அது அழைப்பு என்று பொருளாகாது, அறிவிப்பு என்பதாகத்தான் இருக்கும்.

Annamalai University

* 28 *Q*.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the services of a Revenue Divisional Officer were requisitioned at the Annamalai University about 3rd February 1971; and

(*b*) if so, the details thereof?